DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No. 126/2021**

Prosecution **PW.6**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | திரு.முகமுது ஜாபர் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | முகமது ரபீக் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.03.2026

எதிரி ரெகுலர் வாரண்ட்மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கோவை மாநகரம் மாநகர குற்றப்பிரிவு காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 15.12.2017 அன்று மாயனூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளர் பணியில் இருந்த போது ராஜேந்திரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று மாயனூர் காவல் நிலைய குற்ற எண்.391/2017 சட்டப்பிரிவு 457, 380 இதச பிரிவின் படி வழக்கு செய்து நான் பதிவு செய்திருந்தார். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**2.** அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சாட்சிகள் மோகன்ராஜ், சுப்புராமன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

3. சாட்சிகள் ராஜேந்திரன், கவிதா, ஜெயபால், செல்வன், பாப்பாத்தி, மோகன்ராஜ், சுப்புராமன் ஆகியோர்களை தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கின் சம்பவம் உண்மை என

தெரியவந்ததால் இவ்வழக்கின எதிரியை தேடிய போது22.12.2017ம் தேதி பகல் 10.00 மணிக்கு பசுபதிபாளையம் காவல் நிலைய காவல் ஆய்வாளர் பொறுப்பு புலியூர் முடக்குசாலை அருகே வாகன தணிக்கை செய்து கொண்டிருந்த போது இருசக்கர வாகனத்தில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி TN 47 S 2325 Honda shine இருசக்கர வாகனத்தில் வந்தவர் எங்களை கண்டவுடன் தப்பிக்க முயற்சித்தவரை பிடித்து விசாரித்த போது அவர் பெயர் மணிகண்டன் (எ) வீரமணி என்றும் பின்னர் அவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் விஜயகுமார், சுப்பிரமணி ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்துள்ளார்.

4. பின்னர் 22.12.2017 12.30 மணிக்கு மாயனூர் சந்தைப்பேட்டை எதிரி குடியிருக்கும் கூடாரத்தில் உள்ள அரிசி டப்பாவில் இருந்து எடுத்து ஆஜர் செய்த 3 பவுன் தங்கசெயின் –1, கொக்கியுடன் கூடியது –1 அரைபவுன் தோடு –1 ஜோடி, முக்கால் பவுன் மோதிரம் –1, வெள்ளிக்கொலுசு–1 ஆகியவற்றை மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார். பின்னர் அவர் பணிமாறுதல் காரணமாக சென்று விட்டதால் நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு விஜயகுமார் சுப்பிரமணி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டேன். (**ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

5. வழக்கில் கைப்பற்றப்பட்ட 3 பவுன் தங்கசெயின் –1,கொக்கியுடன் கூடியது –1 அரைபவுன் தோடு –1 ஜோடி, முக்கால் பவுன் மோதிரம் –1, வெள்ளிக்கொலுசு–1 எதிரியையும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். படிவம்–95ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். ( **படிவம் –95 அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இத்துடன் எனது விசாரணையை முடித்து மேல்விசாரணைக்கு காவல் உதவி ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. உடைக்கப்பட்டதாக சொல்லப்படும் பூட்டை வழக்குச்சொத்தாக கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். பசுபதிபாளையம் காவல் நிலைக்குற்ற எண். 912/2017 என்ற வழக்கில் பதிவு செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தின்

அடிப்படையில் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல ஒப்புதல் வாக்குமூலத்தில் அடிப்படையில் எதிரி கைது செய்யப்பட்டார்.புகார்தாரரின் வீட்டின் பூட்டை உடைத்து களவுபோனதாக அ.சா.1 கொடுத்த புகாரில் சம்பவத்தை யார்யார் பார்த்தார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. அ.சா.1 அருகில் இருந்தவர்களுடன் துரத்தி சென்றோம் உடன் யார்யார் வந்தார்கள் என்று புகாரிலும், விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்ததாக சொல்லப்படும் பசுபதிபாளையம்காவல் உதவி ஆய்வாளர் செந்தில்குமாரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் சம்பவயிட கண்ணுற்ற சாட்சிகள் யாரையும் விசாரிதது வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் எதிரியை விரட்டி சென்றவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தோம்.

3. பார்வை மகஜர், மாதிரி வரைபடம் எதிரிக்கு எதிராக காவல் நிலையத்தில் வைதது தயார்செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு எதிரிக்கு எதிராக காவல் நிலையத்தில் வைத்து தயார்செய்யப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. மேற்படி வழக்கின்அ.சா.1 டம் எழுதாத வெள்ளைப் பேப்பரில் மட்டும் கையொப்பம் வாங்கிக்கொண்டு வழக்கிற்கு ஆதரவாக எதிரி மீது பொய்யான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எதிரியிடம் இருந்து எந்த சான்றுப்பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.30 17:03:06 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.